Dr. A. Venmila, Principal. Thanjavur District

HSS

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2024

9 - ஆம் வகுப்பு

# தமிழ்

காலம் : 3.00 மணி மதிப்பெண்கள் :100

பகுதி - I ( மதிப்பெண்கள் : 15 )

குறிப்புகள் : I ) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. II) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

அ) சரியான விடையைத் தேர்வு செய்க. 15×1=15

1. தமிழ்விடு தூது ____ என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது.
   அ) தொடர்நிலைச் செய்யுள் ஆ) புதுக்கவிதை
   இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல்

2. மல்லல் மூதூர் வயவேந்தே - கோடிட்ட சொல்லின் பொருள் என்ன?
   அ) மறுமை ஆ) பூவரசு மரம் இ) வளம் ஈ) பெரிய

3. ஐம்பெருங்குழு, எண்பேராயம் - சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம்
   அ) திசைச்சொற்கள் ஆ) வடசொற்கள்
   இ) உரிச்சொற்கள் ஈ) தொகைச்சொற்கள்

4. தமிழ்நாடு அரசு கிராமப்புற மாணவர்களுக்கு நடத்தும் திறனாய்வுத் தேர்வு எது?
   அ) தேசியத் திறனறித் தேர்வு ஆ) ஊரகத் திறனறித் தேர்வு
   இ) தேசியத் திறனறி, கல்வி உதவித் தொகைத் தேர்வு ஈ) மூன்றும் சரி

5. பூவாது காய்க்கும்,மலர்க்கை - அடிக்கோடிட்ட சொற்களுக்குரிய இலக்கணம் யாது?
   அ) பெயரெச்சம், உவமைத்தொகை ஆ) எதிர்மறைப் பெயரெச்சம், உருவகம்
   இ) வினையெச்சம், உவமை ஈ) எதிர்மறை வினையெச்சம், உவமைத்தொகை

6. பல்லவர் காலச் சிற்பக்கலைக்குச் சிறந்த சான்று ________
   அ) மாமல்லபுரம் ஆ) பிள்ளையார்பட்டி
   இ) திரிபுவனவீரேசுவரம் ஈ) தாடிக்கொம்பு

7. இந்திய தேசிய இராணுவத்தை ..............இன் தலைமையில் ................. உருவாக்கினர்.
   அ) சுபாஷ் சந்திரபோஸ், இந்தியர் ஆ) சுபாஷ் சந்திரபோ ஸ், ஜப்பானியர்
   இ) மோகன்சிங், ஜப்பானியர் ஈ) மோகன்சிங், இந்தியர்

8. திருநாதர்குன்றில் ஒரு பாறையில் புடைப்புச் சிற்பங்களாக உள்ளவை _____
   அ) விலங்கு உருவங்கள் ஆ) தீர்த்தங்கரர் உருவங்கள்
   இ) தெய்வ உருவங்கள் ஈ) நாட்டியம் ஆடும் பாவை உருவங்கள்

9. உலகப் பொதுமறை எனப் போற்றப்படும் நூல் _________
   அ. நாலடியார் ஆ) திருக்குறள் இ) மதுரைக்காஞ்சி ஈ) சீவகசிந்தாமணி

10. நாளிகேரம் என்பதன் பொருள் _____________
    அ) செல்வம் ஆ) முயற்சி இ) தென்னை ஈ) ஆலமரம்

11. இளங்கமுகு, செய்கோலம் - இலக்கணக்குறிப்புத் தருக.
    அ) உருவகத்தொடர், வினைத்தொகை ஆ) பண்புத்தொகை, வினைத்தொகை
    இ) வினைத்தொகை, பண்புத்தொகை ஈ) பண்புத்தொகை, உருவகத்தொடர்



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

பாடலைப் படித்து வினாக்களுக்கு (12,13,14,15) விடையளிக்க:-

அள்ளல் பழனத்து அரக்காம்பல் வாயவிழ
வெள்ளம்தீப் பட்ட(து) எனவெரீஇப் புள்ளினம்தம்
கைச்சிறகால் பார்ப்பொடுக்கும் கவ்வை உடைத்தரோ
நச்சிலைவேல் கோக்கோதை நாடு

12. இப்பாடல் இடம் பெற்ற நூல்

அ. தமிழ்விடு தூது ஆ. பெரியபுராணம் இ. முத்தொள்ளாயிரம் ஈ. இராவண காவியம்

13. இப்பாடலில் இடம் பெற்றுள்ள அடி எதுகைகள்___________

அ. அள்ளல் – வெள்ளம் ஆ. கவ்வை – கோக்கோதை

இ. ஆம்பல் – புள்ளினம் ஈ.சிறகால் – நச்சிலைவேல்

14. 'அள்ளல் ' என்பதன்பொருள்__________

அ. பாக்கு ஆ. முத்து

இ. சேறு ஈ. சங்கு

15. 'வெரீஇ' – இச்சொல்லில் இடம்பெறும் அளபெடை

அ. சொல்லிசைஅளபெடை ஆ. செய்யுளிசைஅளபெடை

இ. இன்னிசைஅளபெடை ஈ. உயிரளபெடை

**பகுதி – II ( மதிப்பெண்கள் : 18 )**

**பிரிவு – 1 எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.**
**(21 ஆவது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.)** 4×2=8

16. **விடைக்கேற்றவினாஅமைக்க**

அ. கல்வி கற்ற பெண்கள் பண்பட்ட நன்செய் நிலத்தினைப் போன்றவர்கள்.

ஆ. சோழநாட்டின் யானைபடை வலிமையானது.

17. "கூவல்" என்று அழைக்கப்படுவது எது?

18. நீங்கள் வாழும் பகுதியில் ஏறுதழுவுதல் எவ்வாறெல்லாம் அழைக்கப்படுகிறது?

19. கனவிலும் இனிக்காதது எவர் நட்பு?

20. கண்ணன் புகுந்த பந்தல் எவ்வாறு இருந்தது?

21. மிகுதியான் – எனத் தொடங்கும் குறளை எழுதுக.

**பிரிவு – 2 எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.**

22. **தொடரைப் பழமொழி கொண்டு நிறைவு செய்க.** 5×2=10

அ) இளமையில் கல்வி _______________

ஆ) கற்றோருக்குச் சென்ற ____________

23. **பிழை நீக்கி எழுதுக.** அ) நல்ல தமிழுக்கு எழுதுவோம்.

ஆ) துன்பத்தால் பொறுத்துக்கொள் பவனே வெற்றி பெறுவான்.

24. **மரபுப்பிழையை நீக்கி எழுதுக.**

அ) இல்லத்தின் அருகே புதிததாகக் கூரை போட்டனர்.

ஆ) கொடியிலுள்ள மலரை எடுத்து வா.

25. **ஒரு சொல்லால் தொடரின் இரு இடங்களை நிரப்புக. (அகல், கால், அலை)**

அ) எனக்கு _______ பங்கு பிரித்துக் கொடுக்க வா! கீழே ஈரம்: பார்த்து உன்_____ ஐ வை.

ஆ) கைப்பொருளைக் கடல் _______யில் தொலைத்துவிட்டு, கரையில் தேடி _______ந்தால் கிடைக்குமா?



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

26. கலைச்சொல் தருக. அ. Download ஆ. Indian National Army

27. செய்வினையைச் செயபாட்டு வினையாக மாற்றும் துணைவினைகள் இரண்டினை எடுத்துக்காட்டுடன் எழுதுக.

குறிப்பு : – செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா தொடரைப் பழமொழி கொண்டு நிறைவு செய்க.

அ. இளமையில் ________ ஆ. சித்திரமும் கைப்பழக்கம் ________

28. பகுபத உறுப்பிலக்கணம் தருக :– கொள்வார்

பகுதி – III ( மதிப்பெண்கள் –18 ) 2×3=6

பிரிவு – I எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க :–

29. திராவிட மொழிகளின் பிரிவுகள் யாவை? அவற்றுள் உங்களுக்குத் தெரிந்த மொழிகளின் சிறப்பியல்புகளை விளக்குக.

30. ஏறுதழுவுதல், திணை நிலை வாழ்வுடன் எவ்விதம் பிணைந்திருந்தது?

31. பத்தியைப் படித்து பதில் தருக.

தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர் முத்துலட்சுமி ஆவார். இந்திய பெண்கள் சங்கத்தின் முதல் தலைவர் சென்னை மாநகராட்சியின் முதல் துணைமேயர், சட்ட மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண்மணி, தேவதாசி முறை ஒழிப்புச் சட்டம், இருதார தடைச் சட்டம், பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கும் சட்டம், குழந்தைத் திருமண தடைச் சட்டம் ஆகியவை நிறைவேறக் காரணமாக இருந்தவர். அடையாற்றில் 1930 இல் அவ்வை இல்லம், 1952 இல் புற்று நோய் மருத்துவமனை ஆகியவற்றை நிறுவியவர்.

அ) சென்னை மாநகராட்சியின் முதல் துணை மேயர் யார்?

ஆ) டாக்டர் முத்துலட்சுமி எந்தெந்த சட்டங்கள் நிறைவேறக் காரணமாக இருந்தார்?

இ) டாக்டர் முத்துலட்சுமி அடையாற்றில் எந்த ஆண்டு அவ்வை இல்லம் நிறுவினார்?

பிரிவு – II

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.
(34 ஆவது வினாவிற்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும்.) 2×3=6

32. அறிவையும் உயிரினங்களையும் தொல்காப்பியர் எவ்வாறு தொடர்புபடுத்துகிறார்?

33. ஆண்டாளின் கனவுக் காட்சிகளை எழுதுக.

34. அ) "காடெல்லாம்" எனத் தொடங்கும் பெரியப்புராணப் பாடலை அடிமாறாமல் எழுதுக. (அல்லது )

ஆ) "பூவாது" எனத் தொடங்கும் சிறுபஞ்சமூலம் பாடலை எழுதுக.

பிரிவு –III எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க :– 2×3=6

35. தன்வினை, பிறவினை – எடுத்துக்காட்டுகளுடன் வேறுபடுத்திக் காட்டுக.

36. தற்குறிப்பேற்ற அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

37. பகுபத உறுப்பிலக்கணம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

பகுதி –IV (மதிப்பெண்கள் : 25)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. 5×5=25

38. அ) பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினைத் தொகுத்து எழுதுக. (அல்லது)

ஆ) இராவண காவியத்தில் உங்களை ஈர்த்த இயற்கை எழில் காட்சிகளை விவரிக்க.

39. அ) உங்கள் பள்ளி நூலகத்திற்குத் தமிழ்– தமிழ் –ஆங்கிலம் என்னும் கையடக்க அகராதி பத்துப் படிகளைப் பதிவஞ்சலில் அனுப்புமாறு நெய்தல் பதிப்பகத்திற்கு ஒரு கடிதம் எழுதுக. *(அல்லது)* ஆ) "எனது பயணம்" என்னும் தலைப்பில் உங்களது அனுபவங்களை வருணித்து எழுதுக.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

40. அ) நயம் பாராட்டுக.

கல்லும் மலையும் குதித்துவந்தேன் – பெருங்
காடும் செடியும் கடந்துவந்தேன்;
எல்லை விரிந்த சமவெளி – எங்கும்நான்
இறங்கித் தவழ்ந்து தவழ்ந்துவந்தேன்.
ஏறாத மேடுகள் ஏறிவந்தேன்–பல
ஏரி குளங்கள் நிரப்பிவந்தேன்; ஊறாத
ஊற்றிலும் உட்புகுந்தேன்–மணல்
ஓடைகள் பொங்கிட ஓடிவந்தேன். – கவிமணி ( அல்லது )

ஆ) என் பெற்றோர் மகிழுமாறு நான் செய்ய வேண்டியது


அ. என் வீட்டின் நிலையறிந்து, தேவையறிந்து பொருள்கள் வாங்குவது.

ஆ. அலைபேசிப் பயன்பாட்டினைப் பத்து நிமிடங்களுக்கு மேல் நீட்டிக்காமல் இருப்பது. இது போன்று ஐந்து செயல்பாடுகளை எழுதுக.

41. மொழிபெயர்க்க.

1. walk like a bull 2. Love your food 3. Strengthen the body. 4. Union is strength 5. Thinking is great

42. அ) காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



குறிப்பு : செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா

பண்புத்தொகைகளை இட்டு நிறைவு செய்க.

(இன்னோசை, பேரொளி, சிற்றோடை, பேரின்பம், பைங்கிளி, பேரூர், செந்தாமரை]

மானாமதுரை ஒரு அழகான ......... நீண்டவயல்களும் .................களும் நிறைந்த அவ்ஊரின் நடுவே வானுயர்ந்த கோபுரத்துடன் கூடிய கோவில் குளத்தில் எங்கும் ...........பூக்கள் மலர்ந்துள்ளன. கதிரவனின் ........... வீசிட சோலைப் ......களின் ...............கேட்போரைப்...........................அடையச் செய்கிறது.

**பகுதி – V ( மதிப்பெண்கள் : 24 )**

அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்க. 3×8=24

43. அ) அன்றாட வாழ்வில் நீங்கள் பயன்படுத்தும் இரண்டு இணையவழிச் சேவைகள் பற்றி விரிவாகத் தொகுத்து எழுதுக. ( அல்லது )

ஆ) ஏறுதழுவுதல் தமிழரின் அறச்செயல் என்று போற்றப்படுவதற்கான காரணங்களை விவரிக்க.

44. அ) 'தண்ணீர்' கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கித் தருக. (அல்லது)

ஆ) எங்கள் ஊர்ச் சந்தை – என்னும் தலைப்பில் நாளிதழ்ச் செய்தி ஒன்றை எழுதுக.

45. அ) பள்ளியில் நடைபெற்ற இலக்கிய மன்ற விழா நிகழ்ச்சிகளைத் திரட்டித் தொகுப்புரை உருவாக்குக. ( அல்லது )

ஆ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.

முன்னுரை – கல்வி – பெண்கல்வி – பெண்கல்வியின் பயன்கள் – சமூகமாற்றம் –சாதனை பெண்கள் – முடிவுரை.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com